## Court of the District Munsif cum Judicial Magistrate No.I, Usilampatti.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Case No.** | : | **CC . 121/2019** | | | |
| **PW/DW/CW** | : | **PW5** | | | |
| **Name** | : | பிரகாஷ் | **Caste** | : | |
| **Father's/ Husband's Name** | : | | **Calling** | : | |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | |

( Accused absent petition filed and allowed)

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 19.08.2024

---

**முதல் விசாரணை:**

நான் உசிலம்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் அரசு போக்குவரத்து கழகத்தில் நடத்துனராக பணியில் இருந்து வருகிறேன். சாட்சி ஓட்டுநர் காசிமாயனை எனக்கு தெரியும். எதிரி உதயக்குமாரை தெரியும். 09.11.2017ம் தேதி மதுரையிலிருந்து உசிலம்பட்டி நோக்கி அரசு பேருந்தை ஓட்டி காசிமாயன் ஓட்டுநராகவும் நான் நடத்துனராகவும் பகல் 12.50 மணியளவில் மதுரையில் இருந்து உசிலம்பட்டிக்கு 2 –2.15 மணியளவில் வந்தபோது மலையாண்டி தியேட்டரை தாண்டி சிறு தொலைவிலுள்ள கோவில் அருகே பேருந்தின் இடதுபக்கம் எதிரி உதயக்குமார் இருசக்கர வாகனத்தில் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி வேகமாக வந்தவர் முன்னால் சென்ற இரு பெண்கள் மீது மோதியதில் ஒருவருக்கு அடிப்பட்டு கீழே விழுந்துவிட்டார். எதிரியின் பின்னால் இருசக்கர வாகனத்தில் உட்கார்ந்திருந்த அவரது மனைவி ரோட்டில் விழுந்துவிட்டார். கீழே விழுந்த பெண்ணிற்கு உடம்பில் முதுகுக்கு கீழே அடிப்பட்டிருந்தது. எதிரியின் மனைவிக்கு கீழே விழுந்ததில் அவருக்கு பின்தலையில் அடிப்பட்டிருந்தது., நாங்கள் எதிரியின் மனைவியை தூக்கி உட்கார வைத்து அவருக்கு தண்ணீர் கொடுத்தோம். நடந்து சென்ற போது அடிப்பட்டு கீழே விழுந்த பெண்ணை பாலா மருத்துவமனைக்கும், எதிரியின் மனைவியை அரசு மருத்துவமனைக்கும் அனுப்பி வைக்க உதவியாக இருந்தோம். போலீசார் சம்பவ இடத்தில் இருந்தார்கள். எதிரியின் மனைவி 3 நாட்கள் கழித்து இறந்துவிட்டதாக சொன்னார்கள்.போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

அன்றைய தினம் எங்கள் பேருந்தில் 20–25 பயணிகள் இருந்தார்கள். நான் பேருந்தில் படிக்கட்டில் நின்று கொண்டு வந்தேன். நாங்கள்

மலையாண்டி தியேட்டரில் பேருந்தை நிறுத்திய போது அந்த இருசக்கர வாகனம் நல்லவேகத்தில் எங்கள் வாகனத்தை கடந்து சென்றது. அதன்பின்பு நாங்கள் எங்கள் வாகனத்தை ஓட்டி வைரவன் கோவில்அருகே வந்தபோது இருசக்கர வாகனம் காளியம்மன் கோவில் அருகே நின்றிருந்தவர்கள் மீது மோதியது . இரண்டு பக்கமும் ரோட்டில் நிறைய கூட்டம் இருந்தது. இருசக்கர வாகனம் மோதிய இடத்திற்கும் எங்கள் பேருந்து நின்றிருந்த துாரம் சுமார் 20 அடி இருக்கும். மண் ரோட்டில் நின்றிருந்த இருவர் மீதும் மோதியது. மோதிவிட்டு அவர்களை தாண்டி சென்றபோது பின்னால் அமர்ந்து சென்றவர் கீழே விழுந்துவிட்டார். எனது ஓட்டுநர் மீது வழக்கு போட்ட விபரம் ஒருவாரம் கழித்து தெரிந்தது. போலீசார் என்னை காவல் நிலையம் வரவழைத்து உண்மை சம்பவம் பற்றி எழுத்து பூர்வமாக என்னிடம் வாங்கினார்கள். நான் எழுதி கொடுத்த மனுவில் முதல் விசாரணையில் சொன்னது போல் தான் எழுதி கொடுத்தேன். எனது ஓட்டுநரையும் அன்றைய தினமே நான் இருக்கும்போது விசாரித்தார்கள். எனக்கு முன்பாக ஓட்டுநர் இருந்தார் நான் கொஞ்ச காலதாமதமாக வந்தேன். அவரிடம் எழுதி வாங்கினார்களா என்ற விபரம் எனக்கு தெரியவில்லை. அன்றை தினம் கூட்டத்தில் எந்த வாகனமும் வேகமாக செல்ல முடியாது என்றால் சரிதான். அ.சா 1 என்பவர் எனது ஓட்டுநர் மீது புகார் கொடுத்து எங்கள் ஓட்டுநர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டதால் பின்னிட்டு எங்கள் அலுவலகத்திலுள்ள அதிகாரியின் செல்வாக்கை பயன்படுத்தி எதிரி மீதும் அவர் மனைவி மீதும் எங்கள் வாகனம் மோதியதை மறைத்து அவர்கள் வாகனம் மோதியதாக வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

S.d./Prakash

Taken down be me in open court
Read over to the witness in the
presence of accused and admitted
by HIM correct.
/Sd.. S.Maharajan
District Munsif cum Judicial Magistrate No.I,
Usilampatti.